# விழுந்து போகுதலின் பிரச்சனையைத் தீர்த்தல்

பாடங்களின் இத்தொடரில், இது வரையிலும் நாம் நடத்துவத்துவம் பற்றிய வேதாகம ரீதியான கண்ணோட்டம் ஒன்றை முன்னிறுத்தி, சபைத் நடத்துனர்களுக்குத் தேவையான திறன்கள் சிலவற்றிற்கு அறிமுகம் அளித்திருக்கின்றோம். இந்த மூன்றாவது பகுதியில், சபை நடத்துனர் களினால் எதிர்கொள்ளப்படுகின்ற மிகப் பொதுவான அறைகூவல்களில் (சிலர் இவற்றைப் பிரச்சனைகள் என்று அழைக்கலாம்) சிலவற்றைப் பற்றிப் படிப்போம்.

சபையில் நடத்துவத்துவம் பற்றிய புத்தகங்கள் போதுமான அளவு செயல்முறையுள்ளவையாய் இராது போகலாம். அவற்றைப் படித்த பிறகு, சபை நடத்துனர்கள், "இது, நான் இப்பொழுது எதிர்கொள்ளுகின்ற பிரச்சனையைத் தீர்க்க எனக்கு எவ்வாறு உதவுகின்றது?" என்று கேட்கச் சாயலாம். சபைப் பிரச்சனை ஒவ்வொன்றிற்கும் தீர்வுகள் யாவற்றையும் எவரொருவரும் கொண்டிருப்பதில்லை என்பது தெளிவாய்த் தெரிந்தாலும் இந்தப் பாடங்கள் அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும் நோக்கம் கொண்டுள்ளன.

கர்த்தருடைய சபையில் (இருந்து) விழுந்து போகுதலின் பிரச்சனை என்பதே நாம் கலந்துரையாட விரும்புகின்ற முதலாவது அறைகூவலாக உள்ளது.[1]

## ஒரு பிரதான அறைகூவல்

விசுவாசமற்ற நபர்கள் (இருப்பதன்) பிரச்சனைக்கு எந்த சபையும் விதிவிலக்காய் இருப்பதில்லை. புதிய ஏற்பாட்டில் விசுவாசத்திலிருந்து விலகிப் போகுதல் என்பது சாத்தியமானதாகவும் உண்மையானதாகவும் உள்ளது. விழுந்து போகுதலுக்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர் (1 கொரி. 10:12; எபி. 6:4-6), மற்றும் சிலர் விழுந்து போயுள்ள தாகக் கூறப்பட்டனர் (கலா. 5:4; யாக். 5:19, 20). இது இன்றைய நாளின் உண்மை நிலையாகவும் உள்ளது; மாறியவர்களில் அநேகமாய் 50 சதவிகி தத்தினர் விழுந்து போகின்றனர். எந்த ஒரு கால அளவிற்காவது சபை நிலவு கின்ற பெரும்பாலான சமூகங்களில், தற்போதைய உறுப்பினர்கள் எத்தனை பேர் உள்ளனரோ, அதே எண்ணிக்கையில் இப்பொழுது விசுவாசமற்றவர் களும் இருக்கின்றனர்.

இது ஒரு பிரச்சனையாக மட்டும் இருப்பதில்லை; இது ஒரு

*துன்பகரமான நிகழ்ச்சியாக உள்ளது. கிறிஸ்தவர்களாகி பிறகு விழுந்து போகின்றவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படியாது இருந்தபோது இருந்த நிலைமையைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலைக்கு ஆளாகின்றனர் என்று வேதாகமம் கூறுகின்றது (2 பேது. 2:20-22). உங்கள் சொந்தக் குடும்பத்தில் ஒரு சகோதரனை அல்லது சகோதரியை இழந்து போவது குறித்துக் கற்பனை செய்து பாருங்கள்! உங்கள் ஆவிக்குரிய சகோதரர் ஒருவர் விழுந்து போகும் பொழுது அதே விஷயம்தான் நடைபெறுகின்றது!*

*பல சபைகள், இரட்சிக்கப்பட்டவர்களைக் காத்துக் கொள்வதற்கான முயற்சிகளைச் சிறிதளவே செய்கின்றன. அவர்கள் புதிய உறுப்பினர்களை முன் வாசல் வழியாக வரவேற்கின்றனர், பிறகு அவர்களைப் பின்வாசல் வழியாக இழந்து போகின்றனர். நாம் பின் வாசல் கதவை மூட வேண்டியது அவசியமாகின்றது!*

*இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நாம் என்ன செய்ய முடியும்? தீர்வுக்கான ஒரு அணுகுமுறையை எபிரெயர் 10:19-25ல் காண முடியும்.*

*எபிரெயருக்கான நிருபம், விசுவாச விலக்கம் என்ற அபாயத்தில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. அவர்கள் "ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்" (3:12) கொண்டு இஸ்ரவேலர்கள் செய்தது போல கீழ்ப்படியாமையினால் (4:11) மற்றும் மனந்திரும்ப இயலாதபடிக்கு விசுவாசத்தை விட்டு விலகிச் சென்று விடுதலுக்கு (6:4-6) எச்சரிக்கப்பட்டனர். (6:7, 8, 10:26-31, 35, 39; 12:15-17 ஆகியவற்றையும் காணவும்.)*

*விசுவாச விலக்கத்தின் இயல்பானது அந்நிய போதனைகளை உள்ளடக்கியிருக்கின்றது (13:7-10); வழக்கமாக, இது யூதத்துவத்தை விட்டு விலகியிருந்தும் கூட, மீண்டும் மோசேயின் பிரமாணத்தை அரவணைத்துக் கொள்ளும் அபாயத்தில் இருந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டதாக எண்ணப்படுகின்றது.*

*இது பயமுறுத்திக் கொண்டிருந்த உபதேச ரீதியான விசுவாச விலக்கமாக மட்டும் இருந்ததில்லை; இது நடைமுறையில் விசுவாச விலக்கமாகவும் இருந்தது. அவர்கள் "அசதியானவர்களாய்" (6:11) ஆகிவிடும் அபாயமும் இருந்தது. அவர்கள் ஆவியற்றவர்களாயும் பரிதாபப்படத் தக்கவர்களாயும் இருந்தனர்; இதன் எழுத்தாளர், "நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி" (12:12) என்று கூறினார். அவர்கள் வளர்ந்திருக்க வேண்டியபடி வளர்ந்திருந்ததில்லை (5:11-14), மற்றும் அவர்களில் சிலர் சபை கூடிவருதலைத் தவற விட்டிருந்தனர்.[2]*

*அவர்களின் சூழ்நிலை நன்கறியப்பட்டதாக ஒலிக்கின்றது. இன்றைய நாட்களின் சபை நடத்துனர்கள் எதை எதிர்கொள்ள எபிரெயருக்கு நிருபம் எழுதப்பட்டதோ அந்தக் குறிப்பிட்ட போதனைகளைக் கையாள வேண்டிய அவசியம் இருப்பதில்லை, மாறாக விசுவாச விலக்கத்தின் அபாயத்திலிருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய இந்த விவரிப்பானது நவீன சபை ஒன்றில் உள்ளது போலப் பேச வேண்டியதாகின்றது. ஆகையால் எபிரெயருக்கு எழுதிய நிருபத்தில் அதிலும் விசேஷமாக 10:19-25ல் முன் மொழியப்பட்ட பிரச்சனைக்குத் தீர்வானது இன்றைய நாட்களுக்கு(ம்)*

*ஏற்புடையதாகவே உள்ளது. விழுந்து போகிறவர்களின் பிரச்சனையைத் தீர்த்து வைக்க இவ்வசனப் பகுதியில் தரப்படும் ஆலோசனை என்ன?*

## *சரியான போதனை*

*முதலாவதாக, இது சபைக்கு சரியான போதனை அளிக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை அளிக்கின்றது.*

*எபிரெயருக்கு எழுதிய நிருபமானது "மேன்மையான" என்பதன் கருத்தை வலியுறுத்துகின்றது. கிறிஸ்து மற்றும் அவருடைய வழியைப் பற்றிய ஒவ்வொன்றும் மோசேயின் பிரமாணத்தைக் காட்டிலும் மேன்மை யானதாக உள்ளது. மிக மேன்மையாக பேசுபவரை நாம் கொண்டுள்ளோம் (எபி. 1:1, 2). பிரமாணம் யார் மூலம் கொடுக்கப்பட்டதோ (2:2), அந்தத் தூதர்களைக்காட்டிலும் இவர் மேன்மையானவராக இருக்கிறார் (1:4-14). இவர் மோசேயைக் காட்டிலும் மேன்மையானவராக இருக்கிறார் (3:3), மற்றும் இவருடைய ஆசாரியத்துவம் லேவியரின் ஆசாரியத்துவத்தைக் காட்டிலும் மேன்மையானதாக உள்ளது (7:7, 15, 16, 23-28). இவர் மூலமாக நாம் மேன்மையானதொரு நம்பிக்கையையும் (7:19), மேன்மையான வாக்குத்தத்தங்களின் அடிப்படையிலான மேன்மையானதொரு உடன் படிக்கையையும் (8:6), மற்றும் மேன்மையான ஒரு பலியையும் கொண்டிருக்கின்றோம் (9:9, 10, 12-14, 23; 10:1-4, 10-18). இவர் மேன்மையான ஒரு பரிசுத்த இடத்தில் இருந்து ஊழியம் செய்கின்றார் (9:11, 23, 24; 12:18-24).*

*குறைந்தபட்சம் ஒரு சில வாசகர்கள் கொண்டுள்ள தவறான கருத்துக்களை மறுத்துரைக்கும்படியாக இந்தப் போதனையானது வடிவமைக்கப்பட்டது என்பது தெளிவு. இது 10:19-25ல் காணப்படும் புத்தி கூறுதல்களுக்கும் அடிப்படை அளிக்கின்றது. இவ்வசனப் பகுதி பின் வருமாறு தொடங்குகின்றது:*

> *ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப் பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினபடியால் … தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியால் …*

*இவ்வகையாக இப்புத்தகத்தின் "உபதேச ரீதியான" செய்தியானது பின்வரு மாறு தொகுக்கப்படுகிறது: (1) நாம் இயேசுவின் இரத்தத்தினால் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க இயலும், மற்றும் (2) நாம் தேவனுடைய வீட்டில் மகா ஆசாரியர் ஒருவரைக் கொண்டுள்ளோம். சந்தோஷப் படுத்துவதற்கான காரணத்தைப் பாருங்கள்! அதை தொடர்ந்து வருபவைகளுக்கு என்ன ஒரு அற்புதமான காரணம்!*

*இது, உறுப்பினர்கள் உண்மை நிறைந்தவர்களாய் நிலைத்திருக்க சபைத் நடத்துனர்கள் உதவுகின்றவர்களாய் இருந்தால், சபையானது நன்கு போதிக்கப்படுவதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று*

மறைமுகமாய் உணர்த்துகின்றது. சரியான போதனை மட்டுமே போது மானது(ம்) அல்ல, ஆனால் அது இல்லாமல், ஒரு சீஷர் நிலைத்திருக்க அஸ்திபாரம் கொண்டிருக்க மாட்டார். கற்பாறை இடங்களில் விதைக்கப் பட்ட விதையைப் போல "வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான்" (மத். 13:21ஆ).

இது, கிறிஸ்தவர்களுக்குப் போதிக்க அவசியமான கொள்கைகளில், கிறிஸ்தவர்களாயிருப்பதினால் நாம் மகிழ்வுடன் அனுபவிக்கின்ற ஆசீர்வாதங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்பதையும் ஆலோசனை தரலாம். நாம் மதிக்கின்றவைகள் குறித்து நாம் நன்முறையில் அக்கறை கொள்ளுகின்றோம்: கால் ரூபாயைத் தொலைப்பதைக் குறித்து யாரும் அதிகம் கவலைப்படுவதில்லை, ஆனால் கால் இலட்சம் ரூபாயைத் தொலைத்துவிடாதிருக்கும்படி பெரும்பான்மையான மக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருப்பார்கள். ஒருவேளை நாம், தேவனுடைய "ஆச்சரியமான கிருபையின்" நிமித்தம் பெற்றுள்ள அற்புதமான ஈவுகளை உண்மையாகவே மதித்தால், அவைகளைப் பற்றிக்கொண்டிருப்பதில் அதிக அக்கறையில்லாதவர்களாய் இருக்க மாட்டோம்.

## தொடர்ந்து தேவனிடத்திற்கு வருதல்

கிறிஸ்துவின் மூலம் பெறக் கூடிய (நியாயப்பிரமாணத்தின் மூலம் பெற முடியாதிருந்த) ஆசீர்வாதங்களைப் பற்றிப் பேசிய பிறகு, (எபிரெய நிருபத்தின்) எழுத்தாளர், வாசகர்களுக்கு மூன்று ஆணைகள் தந்தார், அவை ஒவ்வொன்றும் "நாம் ... செய்யக் கடவோம்" என்ற முன்னுரையுடன் உள்ளன. முதலாவது, "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதய முள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" (10:22) என்பதாக உள்ளது. இதைத் தொடர்ந்து தர்க்க ரீதியாக ''பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க நாம் தைரியம் பெற்றுள்ளோம்'' என்ற கருத்தும், தேவனுடைய வீட்டின்மேல் மகா ஆசாரியர் ஒருவரை நாம் கொண்டுள்ளதால் தேவனிடத்தில் "கிட்டிச் சேர" நாம் பெற்றுள்ள வழியை மகிழ்வுடன் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தும் வருகின்றன. அவ்வாறு செய்யாதிருத்தல் என்பது மதியீனமான தாயிருக்கும்; இது பருவகாலப் பயணச் சீட்டுகளை வைத்துக் கொண்டு அவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பது போல இருக்கும், அல்லது இன்னும் தக்க விதத்தில் கூறுவதென்றால், அரசருடன் உணவருந்த அழைப்பிதழ் ஒன்றைப் பெற்றிருந்தும் அதைப் புறக்கணித்தது போல் இருக்கும்.

கிறிஸ்தவர் தேவனுடைய கிருபாசனத்தண்டையில் எவ்விதம் கிட்டிச் சேருகின்றார்? எபிரெயர் 10:22ல் நான்கு விவரிப்புகள் தரப்படுகின்றன, ஆனால் அவை யாவும் இணையானவையல்ல. "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்" என்பதிலும் "சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாகவும்'' என்பதிலும் உள்ள வினைச்

சொற்கள் இரண்டும் முற்று வினையில் உள்ளன. இவைகள் கடந்த காலத்தில் நிறைவு செய்யப்பட்டு, செயல்விளைவுகள் நிலைத்துள்ள செயலைப் பற்றிப் பேசுகின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள், கடந்த காலத்தில், ''ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால், தங்கள் இருதயம் தெளிக்கப்பட்டதாயும்" மற்றும் தங்கள் "சரீரங்கள் கழுவப்பட்டதாயும்" இருந்தனர்; அதாவது, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றிருந்தனர். இது அவர்கள் உள்ளாகவும் புறம்பாகவும் சுத்திகரிக்கப்பட்டிருந்தனர் என்பதாக இருந்தது. அதன் விளைவாக இன்னமும் செயல் வலிவுடன் இருந்தது. அவர்கள் இன்னமும், தங்களின் ஞானஸ்நானம் தங்களைக் கொண்டு வந்திருந்த நிலையில் இருந்தனர்: அவர்கள் கிறிஸ்தவர்களாக, சபையின் உறுப்பினர்களாக, மீண்டும் பிறந்தவர்களாக, கிருபையினால் இரட்சிக்கப் பட்டவர்களாக இருந்தார்கள்.

வசனம் 22ல் உள்ள மூன்றாவது மற்றும் நான்காவது விவரிப்புகளான, ''உண்மையுள்ள இருதயத்தோடும்,'' மற்றும் ''விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும்'' என்பவை நிகழ் கால வினையில் கூறப்படுகின்றன. கிறிஸ்தவர் தேவனிடம் நெருங்குகையில், அவர் அதை "உண்மையுள்ள இருதயத்தோடும்" மற்றும் "விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும்" செய்ய வேண்டும், மற்றும் அவர், தேவன் இருக்கிறார் என்று நம்புபவராகவும், அவர் (தேவன்) ஆர்வமுள்ளவராய் இருக்கிறார் என்றும், அவரை அணுக முடியும் என்றும் விசுவாசிப்பவராகவும் இருக்க வேண்டும்!

இவ்வசனத்தில் "சேரக் கடவோம்" என்ற வினைச் சொல்லும் நிகழ்கால வடிவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது, இது ஒரு தொடர் வினைச் சொல்லாக உள்ளது. ஆகையால், இது, ''நாம் அணுகுவதைத் தொடர்ந்து காத்துக்கொள்ளுவோம் ..." என்ற கருத்தைக் கொண்டுள்ளது. வாசகர்கள் தேவனிடம் ஒருமுறை மாத்திரம் வரும்படியாக எழுத்தாளர் புத்தி கூறாமல், தேவனிடத்தில் தொடர்ந்து கிட்டிச் சேரும்படி புத்தி கூறுகின்றார்.

ஆகையால், ஞானஸ்நானம் பெற்றவர்கள் உண்மையுடனும் விசுவாசத் துடனும் தேவனிடத்தில் (தொடர்ந்து) வருதலைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று இவ்வசனப் பகுதி புத்தி கூறுகின்றது. அவ்வாறு செய்தலுக்கு, கிறிஸ்தவர் ஜெபத்தின் மூலம் தேவனிடம் அடிக்கடி பேசுவதும், தேவன் தம்முடைய வசனத்தின் மூலம் பேசும்படி அனுமதிப் பதும் அவசியமாகின்றன. ஒரு கிறிஸ்தவர் தம்மை தேவனிடம் இன்னும் நெருக்கமாகக் கொண்டு வரக்கூடியதான வளம்மிக்க ஜெப வாழ்வை கொண்டிருந்தால் அவர் விழுந்து போகமாட்டார்.

## விசுவாசத்தை உறுதியாய்ப் பற்றிக்கொள்ளுதல்

"நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ள வராயிருக்கிறாரே'' என்பது எபிரெயர் 10:22-25ல் காணப்படும் இரண்டாவது ஆணையாக உள்ளது (வ. 23). இந்நிருபம் யாருக்கு

எழுதப்பட்டதோ, அந்தக் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தலையும் உபத்திரவத்தையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர். அப்படிப்பட்ட ஒரு வேளையில் அவர்களுக்கு என்ன தேவைப்பட்டது? அவர்களுக்கு சகிப்புத் தன்மையும் (10:36; 12:7) பொறுமையும் (12:1) மற்றும் விசுவாசமும், விசேஷமாய் உண்மைத் தன்மையுடன் இருத்தல் என்ற கருத்தில் (10:39; 11) விசுவாசமும் தேவைப்பட்டன. 10:23ல், எழுத்தாளர், அவர்களிடம் அவர்களின் அறிக்கையை - அவர்களின் பக்தியை, அவர்களின் விசுவாசத்தை - உறுதியாய்ப் பற்றிக் கொள்ளும்படி கூறினார். அவர்களுக்கு "உறுதியான விசுவாசம்" - சகிப்புத்தன்மையுள்ள, பற்றிக்கொண்டுள்ள, கிறிஸ்தவருக்கு என்ன நடந்தாலும் பொருட்படுத்தாமல் "உறுதியாய்ப் பற்றிக் கொண்டுள்ள" - விசுவாசம் தேவைப்பட்டிருந்தது.

கிறிஸ்தவர்கள் நம்பிக்கையை "உறுதியாய்ப் பற்றிக் கொள்ள" வேண்டியது ஏன்? ஏனென்றால் நமக்கு நம்பிக்கையை அளிக்கின்ற தேவன் உண்மையுள்ளவராய் இருக்கின்றார்! அவர் தம்முடைய வாக்குத்தத்தங்களைக் காத்துக் கொண்டிருக்கிறார்! அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றை நமக்குச் செய்வார். விசுவாசத்தில் நிலைத்திருப்பதற்கு என்ன ஒரு அற்புதமான ஊக்குவிப்பு!

சபை நடத்துனர்கள், புதிய கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளக்கூடிய சோதனைகளைப் பற்றி அவர்களுக்கு முன்னெச்சரிக்கை செய்கின்ற ஒரு போதனைத் திட்டத்தின் மூலம் இவ்வகையான "உறுதியான விசுவாசத்தை" மேம்படுத்தி நாட முடியும். (இவ்வித) கலந்துரையாடல் வகுப்புகளும் ஊழியத் திட்டங்களும் விசுவாசத்தில் நிலைத்திருத்தல் என்பதில் உள்ள சிரமங்களைப் புதிய கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்துகின்றன, ஆனால் ஒரு "பாதுக்காப்பான" சூழலில் இவ்வாறு செய்தல் என்பது அவர்களை ஆவிக்குரிய வகையில் அபாயமான "உண்மை உலகில்" பெலப்படுத்தப் பயன்படலாம்.

## பரஸ்பர உற்சாக மூட்டுதல்

எபிரெயர் 10:22-25ன் மூன்றாவது ஆணையானது வசனங்கள் 24 மற்றும் 25ல் காணப்படுகின்றது: "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி, ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்."

இது விழுந்து போகுதலின் பிரச்சனையைத் தீர்ப்பதற்கான திறவுகோலாக இருக்கலாம். ஒவ்வொரு உறுப்பினரும் ஆவிக்குரிய தொடர்ந்த வளர்ச்சியின் மூலமாகவும் விசுவாசத்திற்குப் பின்வாங்காத உறுதிப்பாட்டினாலும் தன்னை விசுவாசமுள்ளவராகக் காத்துக் கொள்ளும் பொறுப்புடையவராய் இருக்கிறார் என்று போதிப்பது சபை நடத்துனர்களுக்கு அவசியமானதாக உள்ளது. (கலா. 6:5 மற்றும் யூதா 21 ஆகிய வசனங்களைக் காணவும்.) இருந்த போதிலும், விசுவாசத்தில் நாம் நிலைத்

திருப்பதற்கு நாம் கொடுக்கக் கூடிய உற்சாக மூட்டுதலும் ஒருவர் மற்றவரிடத்திலிருந்து பெற வேண்டிய உற்சாக மூட்டுதலும் அவசியமாய் உள்ளது.

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இந்த பரஸ்பர உற்சாக மூட்டுதல் பற்றிய ஆறு சத்தியங்களை முன் வைத்தார்: (1) இது ஜாக்கிரதையான/ கவனம் நிறைந்த சிந்தையின் விளைவாய் இருக்க வேண்டும். நாம் "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்" (10:24). இது, நாம் இதனை நிறைவேற்ற மிகச் சிறந்த வழிமுறைகளை நோக்குதல் அவசியம் என்று ஆலோசனை அளிக்கின்றது. (2) இது ''தூண்டுதலை'' உள்ளடக்குவதாக இருக்கின்றது. இதன் எழுத்தாளர், தூண்டுதல், ஏவுதல், தள்ளுதல் அல்லது ஊக்கமூட்டுதல் என்று அர்த்தப்படுத்துவதாய்க் காணப்படும் "ஒருவரையொருவர் ஏவுதல்" என்று கூறினார். (3) இது மாபெரும் அன்பு மற்றும் நற்செயல்களுக்கு நம்மை நடத்த வேண்டியதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் "அன்புக்கும் நற்கிரியை களுக்கும் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்," கோபம் கொள்ள அல்லது பொல்லாத செயல்களுக்கு ஏவப்பட ஏதுவாக இது செய்யக் கூடாது. (4) இது சபை கூடிவருதல்களின் போதும் மற்ற வேளை களிலும் கூட நடக்க வேண்டும். இவ்வசனப் பகுதியானது ''சபைகூடி வருதலை விட்டு விடுதல்'' என்பதற்கு எதிராக எச்சரிக்கை செய்யத் தொடருவதுடன், அப்படிப்பட்ட ஒரு புறக்கணித்தலை ''ஒருவரை யொருவர் உற்சாக மூட்டுதல்" என்பதற்கு எதிரானதாகக் கூறுகின்றது. சபை கூடுதல்களின் போது எது நடந்தாலும், பரஸ்பர உற்சாக மூட்டுதலே விளைவாய் இருக்க வேண்டும். (5) இது வாழ்வுக்கு அர்த்தம் தரும் கடைசி நிகழ்வை நினைவு கூருகையில் செய்யப்பட வேண்டியதாக உள்ளது: கர்த்தருடைய நாள், அதாவது இரண்டாம் வருகை. "நாளானது சமீபித்து வருகிறதை" நாம் எவ்வளவாய்க் காண்கின்றோமோ அவ்வளவாய் நாம் ஒருவருக்கொருவர் உற்சாக மூட்ட வேண்டும்.[3] (6) விசுவாச விலக்கம் - பாவத்தில் நிலைத்திருத்தல் - என்பது பயங்கரமான விளைவுகளைக் கொண்டுள்ளதால் (10:26-31) இது (உற்சாக மூட்டுதல்) மிகவும் முக்கியமானதாக உள்ளது.

எபிரெயர் நிருபத்தில் பரஸ்பர உற்சாக மூட்டுதலை வற்புறுத்துதல் என்பது இவ்விடத்தில் முதல் முறையாகக் காணப்படுவதில்லை. வனாந்தரத்தில் விழுந்து போன இஸ்ரவேலர்களின் உதாரணத்தைப் பயன்படுத்திய பிறகு இதன் எழுத்தாளர், ''சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கை யாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்'' (3:12, 13) என்று கூறினார். ஒருவேளை, அன்றாடம் புத்தி கூறுதலுக்கான அவசியம் என்பது இவ்வசனப் பகுதியின் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமாக இருக்கலாம். சபை உறுப்பினர் கள் சபை கூடுதல்களின் போது மட்டுமே ஒருவர் மற்றவருடன் தொடர்பு

கொள்ளும் நிலை உள்ளதென்றால், அவர்கள் இந்த வேண்டுகோளை நிறைவேற்ற இயலாது.

முறையான பரஸ்பர புத்திகூறுதல் மற்றும் உற்சாக மூட்டுதல் என்பவற்றிற்கான அவசியமானது விசுவாச விலக்கத்தின் அலையை நீக்கக் கூடிய ஒரு திட்டத்தின் மூன்று பாகங்களை ஆலோசனையாகத் தருகின்றது.

முதலாவது, ஒருவர் - மற்றவரின் மீதான பொறுப்பு என்பதாக உள்ளது. நாம் ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள - விசேஷமாய் புதிதாய் மாறியவர்கள் மீது கொண்டுள்ள - பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் நமது சகோதரர்களின் காவலர்களாய் இருக்கின்றோம் என்று வேதாகமம் போதிக்கின்றது. (கலா. 6:2ஐக் காணவும்.) சபை நடத்துனர்களுக்கு மற்றவர்களைக் குறித்து ஒரு விசேஷித்த பொறுப்புள்ளது: அவர்கள் மந்தையின் ஆத்துமாக்களைக் குறித்துக் கணக்கு ஒப்புவிப்பவர்கள் என்ற வகையில் அவர்களை கவனிக்கின்றனர் (எபி. 13:17). அத்துடன் கூடுதலாக, ஒரு நல்ல குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் மற்ற ஒவ்வொரு உறுப்பினர் மீதும் பொறுப்புள்ளவராக உணருவது போலவே, சபை என்ற குடும்பத்திலும் ஒவ்வொரு உறுப்பினரும் சபையின் மற்ற ஒவ்வொரு உறுப்பினரைக் குறித்தும் பொறுப்புள்ளவராய் உணர வேண்டும். “நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயுமிருக்கிறோம்” என்று பவுல் கூறினார் (எபே. 4:25ஆ).

இரண்டாவது, நெருங்கிய உறவுகள் என்பதாக உள்ளது. கிறிஸ்தவர்கள் பிற கிறிஸ்தவர்களுடன் நெருங்கிய பிணைப்புக்களை நிலைநாட்டிக் கொள்வது அவசியமானதாக உள்ளது. நமது நெருங்கிய நண்பர்களாய் உள்ளவர்களிடமிருந்துதான் உற்சாக மூட்டுதல் என்பது செயல் வலிவுடன் வருகின்றது. மற்றும், நாம் விசுவாசத்துடன் நிலைத்திருப்போமா இல்லையா என்பது பிற கிறிஸ்தவர்களுடன் நாம் கொண்டுள்ள உறவின் நெருங்கிய தன்மையினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது.

ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நாங்கள் ஊழியம் செய்த சபையின் முதல் ஐந்து ஆண்டுகளின் வளர்ச்சி பற்றி 1973ல் நான் ஆராய்ச்சி செய்தேன். மாற்றம் அடைந்தவர்களில் பின்வரும் மூன்று குழுவினர் மற்றவர்களை விட அதிகமாய் விசுவாசத்தில் நிலைத்திருக்கச் சாத்தியக்கூறு இருந்ததாக நான் கண்டுபிடித்தேன்: (1) தாங்கள் மாற்றம் அடைந்த பொழுது சபையில் நெருங்கிய நண்பர்களையோ அல்லது உறவினர்களையோ கொண்டிருந்தவர்கள், (2) தாங்கள் மாற்றம் அடைவதற்கு முன்பு நீண்ட காலமாக சபை ஆராதனைகளில் கலந்து கொண்டிருந்தவர்கள், மற்றும் (3) இருபத்தி ஐந்து வயதிற்குக் கீழானவர்கள். இந்த மூன்று குழுக்களிலும், மாற்றம் அடைந்தவர்கள் தாங்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பாகவே சபை உறுப்பினர்களுடன் நெருங்கிய தனிப்பட்ட உறவுமுறைகள் கொண்டிருந்தனர். சபைக்கு வருகை தந்து கொண்டிருந்தவர்கள் சபையில் இருந்த மக்களுடன் ஏற்கனவே நண்பர்களாயிருந்தனர், மற்றும் இருபத்தி ஐந்து வயதுக்குக் கீழ் இருந்தவர்கள் எல்லாரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவிலும் கூடிய இளைஞர் குழுவின் உறுப்பினர்களாய் இருந்தனர்.

சபைகள் ஏன் வளருகின்றன என்ற நூலில் ஃபிளேவில் யீக்லி, ஜுனியர்

அவர்கள், தமது ஆய்வானது, புதிதாய் மாறியவர்கள் தங்களின் நட்புறவு வடிவங்களை மாற்றிக் கொண்டால், அவர்கள் மாறியவர்களாய் நிலைத் திருக்கின்றனர் என்று காண்பித்ததாகக் கூறினார்.[4] அவர், "இவர்கள் சபையின் உறுப்பினர்களுடன் தனிப்பட்ட உறவுமுறைகளை ஏற்படுத்திக் கொள்ளும் பொழுது, விசுவாசத்தில் நிலைத்தவர்களாய் இருக்கின்றனர் என்று இந்தக் கணக்கீட்டு விவரம் ஆலோசனை அளிக்கின்றது. அவர்கள் இவ்விதமான தனிப்பட்ட உறவுகளை ஏற்படுத்தாத போது சபையிலிருந்து விழுந்து போகின்றனர்" என்று(ம்) கூறினார்.[5] ஒரு புதிய உறுப்பினர் ஆறு மாதத்திற்குள் ஏழு நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ளாதிருந்தால் (அல்லது ஏற்கனவே கொண்டிராதிருந்தால்) பெரும்பாலும் அவர் விழுந்து போகின்றார் என்பதை இவரது ஆய்வு காண்பித்தது.[6] அது, புதிதாய் மாறியவர்கள் சபைக்குள் தனிப்பட்ட உறவுகளை ஏற்படுத்தாவிட்டால் அநேகமாய் அவர்கள் விழுந்து போவார்கள் என்று கூறுவதற்கான இன்னொரு வழியாக உள்ளது.

நிலைநாட்டப்படும் உறவின் வகை என்பது முக்கியமானதாக உள்ளது; பிற கிறிஸ்தவர்களுடன், ஒரு விசேஷித்த உறவுமுறை புதிய உறுப்பினர் களுக்கு அவசியமானதாக உள்ளது. அது - ஆராதனை கூட்டத்திற்குப் பின்பு "ஸ்தோத்திரம்" என்று கூறுவதைவிட ஆழமானதாக - நெருக்கமானதாக இருக்க வேண்டும். அது *விரைவிலேயே நிலைநாட்டப்பட* வேண்டும். இந்த உறவுகள் விரைவில் நிலைநாட்டப்படவில்லையென்றால், மாற்றம் அடைந்தவர்கள் விழுந்துபோகும் சாத்தியம் உள்ளதென்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. "முதல் ஆறு மாதங்கள் சிக்கலானவையாக உள்ளன. அந்தக் காலகட்டத்திற்குள் சரீரத்தில் ஒருங்கிணைக்கப்படாத புதிய மக்கள் பின்வாசல் வழியே வெளிச் சென்று விடுவார்கள்."[7] இது *நாள்தோறும்* - நமது கூட்டங்களில் புதிய உறுப்பினர்களைக் கண்டு, அவர்களை அறிந்தால் மட்டும் போதாது; அவருக்கு நாம் *நாடோறும்* புத்தி கூற வேண்டும் (எபி. 3:13) - இருக்க வேண்டும்.

தேவையான தனிப்பட்ட உறவுமுறைகளின் வகையை நாம் எவ்வாறு ஏற்படுத்த முடியும்? (1) சபையில் உள்ள மக்களுடன் ஏற்கனவே தனிப்பட்ட உறவுமுறைகள் கொண்டுள்ள மக்களை நாம் மாற்ற முடியும். (2) நாம் மற்றவர்களின் தேவைகள் குறித்து உணர்வுடையவர்களாக முடியும். தனிமையும் கைவிடப்படுதலும் நவீன மனிதனை வாதிக்கின்றன. மக்கள் சபைக்குள் வருகின்ற பொழுது, அவர்கள் ஒன்றுகூடியிருத்தலுக்கான வாய்ப்பை அடிக்கடி எதிர்நோக்குகின்றனர். அவர்கள் அதைக் கண்டறிவதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோம். (3) புதிதாய் மாறியவர் களுடன், சாத்தியமான பல வழிகளில் நாம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும். போதகராய் இருத்தல் என்பது எனக்கும், கற்பவரா யிருத்தல் என்பது அவருக்கும், ஒரு கருத்தில் நாங்கள் உறவு படுத்தப் பட்டுள்ளோம் என்று அர்த்தப்படுகின்றது. அது எங்களை ஒருவர் மற்றொரு வருடன் ஒரு கயிற்றினால் பிணைக்கின்றது. அத்துடன் நாங்கள் பிள்ளைகள் பெற்றிருந்தால், ஒரே இடத்தில் வேலை செய்தால், ஒரே வகையான பொழுது போக்கைக் கொண்டிருந்தால், மற்றும் ஒரே விதமான

விளையாட்டை மகிழ்வுடன் அனுபவித்தால் நாங்கள் (போதகரும் கற்பவருமாக) ஒரு வழிமுறையில் மட்டுமின்றி ஐந்து வழிமுறைகளில் உறவு படுத்தப்பட்டுள்ளோம். உள்ளபடி நாங்கள் ஐந்து கயிறுகளினால் ஒன்றாகக் கட்டப்பட்டுள்ளதுபோல இருக்கிறோம். அவ்வகையான தனிப்பட்ட உறவானது புதிதாக மாற்றம் அடைந்தவர்களை நாம் போதகர்/கற்பவர் என்பதில் மாத்திரம் உறவு படுத்தப்பட்டுள்ள நிலைக்கும் மேலாக விசுவாசத்தில் நிலைத்திருக்க உதவுகின்றது. (4) புதிதாய் மனமாற்றம் அடைந்தவர்கள் (நம்மால்) இயன்ற அளவு அதிகமான உறுப்பினர்களுடன் நெருங்கிய பழக்கமுடையவர்களாவதற்கு நாம் உதவ முடியும். (5) நாம் உபசரிப்பை நடைமுறைப்படுத்தி, ஐக்கியத்தை வலியுறுத்த முடியும்; உணவைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் தனிப்பட்ட உறவுமுறைகள் ஏற்படுத்தப்படுகின்றன. (6) இயன்ற அளவுக்கு விரைவில் அந்த உறுப்பினரை நாம் சபையின் நிகழ்ச்சியில் ஒன்றுசேர்த்துக் கொள்ள முடியும் - வேதாகம வகுப்பில் கலந்து கொள்ளுதல், பணிக் கூட்டங்களில் ஈடுபாடு உடையவராகுதல், ஆராதனையை வழி நடத்துதல், மற்றும் பிற உறுப்பினர்களுடன் ஊழியம் செய்தல். நாம் ஒன்றுகூடி ஊழியம் செய்கையில் நாம் நமது தனிப்பட்ட உறவுகளைப் பெலப்படுத்துகிறோம்.

எல்லா உறுப்பினர்களையும் விசுவாசமுள்ளவர்களாய்க் காத்துக் கொள்வதற்கான திட்டத்தின் மூன்றாம் பாகமாக இருப்பது, விசுவாசமற்றவர்களை உடனடியாக நாடுதல் என்பதாக உள்ளது. நம்மிடையே உள்ள பிணைப்பை யாரேனும் மிகச் சுலபமாக/கடின போராட்டமின்றி உடைத்து விட நாம் அனுமதிக்காத அளவுக்கு ஒருவர் மற்றவர் மீது கொண்டுள்ள நமது உறுதிப்பாடானது மிகவும் தீவிரமானதாக உள்ளது. தவறு செய்கிறவர்களை (அதிலிருந்து திருப்பி) மீண்டும் கொண்டு வந்து சேர்க்குமாறு வேதாகமம் கேட்டுக் கொள்கின்றது: "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் … அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள் …" (கலா. 6:1; யாக். 5:19, 20ஐயும் காணவும்).

அலைந்து திரிகிறவர்களை நாடும் பொறுப்பு மட்டுமின்றி, அவர்களை உடனடியாக நாடும் பொறுப்பையும் நாம் கொண்டுள்ளோம்! இரண்டு மாதங்கள் (இரு ஆண்டுகளை விட மிகக் குறைவான காலம்) காத்திருத்தல் என்பது மிகவும் நீண்ட காலமாகி விடுகின்றது! பின்வருவது போன்ற ஒரு குடும்பத்தை நீங்கள் கற்பனை செய்ய இயலுமா?: இரவு உணவு வேளையில், இளைஞனான ஜானியின் இடம் காலியாக உள்ளது, யாரொருவரும் அவரைத் தேடுவதில்லை, யாரேனும் ஒருவர், "யாரேனும் ஜானியை சமீபத்தில் பார்த்தீர்களா? இல்லையா? அவரைக் காணும்படி நாம் தேட வேண்டியிருக்கலாம்" என்று கூறும்பொழுது அவர் பற்றி நினைவு வருகிறது என்று வைத்துக் கொள்வோம். இது போன்ற ஒரு குடும்பத்தில் வாழ்வதற்கு எவரொருவரும் விரும்ப மாட்டார். சபை என்பது நிச்சயமாகவே இந்த மாதிரியான குடும்பமாக இருக்கக் கூடாது. வராதவர்களைக் குறித்து நாம் அறிதலும், அவர்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளுதலும் மற்றும் அவர்கள் விலகித் திரியத் தொடங்கியிருப்பினும், அவர்களைத் திரும்பக்

கொண்டு வர உடனடியாகத் தேடுதலும் அவசியமாகின்றது.

அலைந்து திரிகின்ற ஆடுகளை நாம் தேடும் வழி என்பது அவற்றைத் தேட வேண்டிய அவசியத்தைப் போல அவ்வளவு முக்கியமானதல்ல! சில வேளைகளில் நாம் தவறான யுக்திகளைப் பயன்படுத்தி விடுவோமா என்று பயந்துபோய் ஒன்றுமே செய்யாமல் விட்டுவிடுகின்றோம். பின்வரும் கதையானது அந்தக் கருத்தை விவரிக்கலாம்:

புதிதாக மாறியிருந்த முரட்டு சுபாவமும், கல்வியறிவற்றவருமான ஒரு மனிதர் கர்த்தருக்கென்று ஊழியம் செய்வதில் அக்கினியாய் இருந்தார். தாம் செய்வதற்கு ஏதாவது ஊழியம் தரும்படியாக அவர் பிரசங்கியாரைக் கேட்டுக் கொண்டார். (அவருக்குத் தருவதற்கேற்ற) தகுதியான பணிகளை அதிகமாய் அறிய இயலாத நிலையில் அந்தப் பிரசங்கியார், சமீபத்திய மாதங்களில் சபைக்குச் சரியாக வராதிருந்தவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை அவருக்குக் காண்பித்தார், அவரிடத்தில் சபைக் கடிதத் தாள்கள் சிலவற்றைக் கொடுத்து, "இந்த மக்கள் அதிகம் ஒழுங்கு முறையுடன் சபைக்கு வருமாறு உற்சாகப்படுத்துவதற்கு நீங்கள் இவர்களுக்குக் கடிதம் எழுதலாம்" என்று கூறினார். புதுக் கிறிஸ்தவர் மிகுந்த உற்சாகத்துடன் அந்த வேலையை ஏற்றுக் கொண்டு சென்றார். மிகக் குறுகிய நாட்களிலேயே அந்தப் பிரசங்கியார் சபையின் உறுப்பினராயிருந்த மருத்துவர் ஒருவரிடமிருந்து ஒரு கடிதம் வரப் பெற்றார். அதில் பின்வருமாறு எழுதப் பட்டிருந்தது:

> அன்பு சகோதரர் ஜோன்ஸ் அவர்களுக்கு,
>
> நான் ஆராதனைக்கு வராமல் புறக்கணித்தல் பற்றி சகோதரர் ஜார்ஜ் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வரப் பெற்றேன். எனது பணிக்கு அதிகம் நேரத்தை ஒதுக்க வேண்டியிருந்ததால் ஒவ்வொரு ஆராதனையிலும் கலந்து கொள்ளுதல் என்பது மிகவும் கடினமாயிருந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே. இருந்த போதிலும், எதிர்காலத்தில் நான் சிறப்புறச் செய்ய முயற்சிப்பேன். அதே வேளையில், நான் வராதிருந்த ஞாயிற்றுக்கிழமைகளில் நான் இட வேண்டிய காணிக்கைக்கான காசோலையொன்றை நான் இத்துடன் இணைத்துள்ளேன், அத்துடன் கூடுதலாக ஊழிய நிதிக்கென்று ஒரு சிறு தொகையையும் அதில் சேர்த்துள்ளேன். எனது பொறுப்பை எனக்கு நினைவூட்ட உதவியதற்காக நன்றி.
>
> கிறிஸ்துவுக்குள் உங்கள்,
> டாக்டர். ஜான் ஸ்மித்
>
> பின்குறிப்பு: "Dirty" என்ற வார்த்தைக்கு ஒரே ஒரு "t" தான் போட வேண்டும் என்றும், "skunk" என்ற வார்த்தையில் "c" என்ற எழுத்து இராது என்பதையும் சகோதரர் ஜார்ஜ் அவர்களிடம் தயவு செய்து கூறவும்.[8]

விலகிச் சென்றுள்ளவர்களை நாம் எவ்வாறு நாடுகின்றோம் என்பதல்ல ஆனால் அச்செயலைச் செய்தல் என்பதே மிகவும் முக்கியமான விஷயமாக

உள்ளது!

எபிரெயர் 10:22-25ல் இந்த மூன்றாவது ஆணையானது, பின்வரும் கருத்தை மறைமுகமாய் உணர்த்துகிறது: சபைக்குள் “குடும்ப உணர்வை” உண்டாக்குவதும் மற்றும் (1) கிறிஸ்தவர்கள் ஒருவர் மீது ஒருவர் பொறுப் புடையவர்களாய் உள்ளனர் என்ற ஒரு நம்பிக்கைக்கும் (2) உறுப்பினர் களிடையே, அதிலும் விசேஷமாக புதிய உறுப்பினர்கள் மற்றும் விசுவாசத்தில் பக்குவம் கொண்டவர்கள் ஆகியோரிடையே நெருக்கமான உறவுமுறைகளின் மேம்பாட்டிற்கும், மற்றும் (3) விசுவாசமற்று உறுப்பினர் கள் விழுந்து போகத் தொடங்குகையில் அவர்களை நாடி அடைவதற்கான தொடர்ந்த ஒரு முயற்சிக்கும் வழிநடத்துவதான திட்டங்களை சபை நடத்துனர்கள் வடிவமைக்க வேண்டியது அவசியமானதாக உள்ளது.

## முடிவுரை

எபிரெயர் 10:19-25 வசனப்பகுதியானது, விழுந்து போகுதலின் பிரச்சனையைத் தீர்க்க விரும்பும் சபை நடத்துனர்கள் பின்வரும் இலக்குகளை நிறைவேற்றும் திட்டங்களை வடிவமைத்து, மேம்படுத்தி மற்றும் பராமரித்தல் அவசியம் என்று ஆலோசனை அளிக்கின்றது:

- ஒவ்வொரு உறுப்பினருக்கும் தேவனுடைய வசனம் போதிக்கப் பட்டுள்ளதென்று காணும்படி முயற்சித்தல்.
- தனித் தனியாகக் கிறிஸ்தவர்கள் தேவனிடம் நிலையாகக் கிட்டிச் சேரும்படி உற்சாக மூட்டுதல்.
- சோதனைகளில் நிலைத்து நிற்கப் போதுமான அளவு பலமான விசுவாசத்தை மேம்படுத்திக் கொள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவுதல்.
- உறுப்பினர்கள் மத்தியில் பரஸ்பர உற்சாக மூட்டுதலைத் தொடருதல் என்ற நிலையை விளைவித்தல்.

நமது உறுப்பினர்களில் 50 சதவிகிதம் பேரை இழந்து போகுதல் என்பதை நாம் “சாதாரணமானது” அல்லது “தவிர்க்க இயலாதது” என்று ஏற்றுக் கொள்ளக்கூடாது. யூதாஸின் போதகராக இயேசு இருந்த போதிலும் அவன் விழுந்து போனது போலவே நமது முயற்சிகளுக்கும் அப்பால் சிலர் விழுந்து போவார்கள் என்றாலும், இது ஒரு விதியாக நிகழுவதை நாம் எதிர்பார்க்கக் கூடாது அல்லது இந்தப் பிரச்சனையினால் நாம் நொறுங்கி விழுந்து விடக் கூடாது.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் விலையேறப் பெற்றவராக இருக்கின்றார். ஒருவரையாகிலும் இழந்து விடுவதற்கு நாம் விரும்புவதில்லை! 100 ஆடுகளில் ஒன்றை மட்டுமே இழந்து போன ஒரு மேய்ப்பனைப் பற்றிய உவமையொன்றை இயேசு லூக்கா 15:4-6ல் உரைத்தார். அந்த மேய்ப்பன் திருப்தியடைந்தவனாயிருந்தானா? அவன், “நான் 99 சதவிகிதம் வெற்றி கரமான தொகை கொண்டுள்ளேன்! ஒன்றே ஒன்றை மட்டுமே நான் தொலைத்துள்ளதால் இன்றிரவு நான் நன்றாய் உறங்க முடியும்” என்று கூறினானா? இல்லை, அந்த மேய்ப்பன் தான் தொலைத்ததைக் கண்டு

பிடிக்கும் வரையிலும் அதைத் தேடிச் சென்றான்! ஒரு ஆடு - ஒரு ஆத்துமா - என்பது இயேசுவுக்கு விலையேறப் பெற்றதாயிருந்தது! நமக்கும் கூட ஒவ்வொரு ஆத்துமாவையும், விசேஷமாய் அந்த ஆத்துமா நமது சகோதரனாக அல்லது சகோதரியாக இருப்பதால் மிகவும் விலையேறப் பெற்றதாயிருக்க வேண்டும்!

---

குறிப்புகள்:

[1]இந்தப் பாடத்தில் கருத்துக்கள், காய் ரோப்பரின் "Keeping the Saved Saved," *Truth for Today* 11 (June 1990): 44-49 என்ற பாடத்திலிருந்து தாராளமாய் பெறப் பட்டுள்ளன. [2]எபிரெயர் 13:1-6 மற்றும் பிற வசனங்களின் நடைமுறை வேண்டுகோள்கள் சபையின் விசேஷித்த தேவைகள் அல்லது குறைபாடுகளைப் பிரதிபலிக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. [3]எபிரெயர் 10:25ன் "நாளானது" என்பதற்கு, இவ்வசனத்தின் மற்ற பகுதிகளுக் குள்ள பிற விளக்கங்களை போலவே, பிற விளக்கங்கள் உள்ளன என்பது தெளிவு. [4]Flavil R. Yeakley, Jr., *Why Churches Grow*, 2d ed. (Arvada, Colo.: Christian Communications, 1979), 72. [5]Ibid., 54. See also Win Arn and Charles Arn, "Closing the Evangelistic Back Door," *Leadership* (Spring 1984):29. [6]Cited by Arn and Arn, 29. [7]Ibid., 30. [8]இதுஎனக்கு பிரியமான கதைகளில் ஒன்றாய் இருக்கையில், இதனை முதலில் எங்கு கேட்டேன் என்ற ஞாபகம் எனக்கில்லை. யார் தோற்றுவித்தார் என்றும் நான் அறியேன்.